
# இரண்டு மனித இனங்கள் - பழைய மனிதன், புதிய மனிதன் - 08

வேத வசனம் : *யோவான் 8:44; 14:30; ரோமர் 3:22-23; 6:1-11; 8:13; 29; 13:14; 2 கொரி. 5:21; எபே. 6:11; பிலி. 1:19; 2:12-13; கொலோ. 1:13; 1 தெச. 5:8; எபி. 2:10; 4:15; 12:1-2; யாக். 1:22-23; 1 பேதுரு 2:1-2; 1 யோவான் 3:8-10*




தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் நம் வாழ்க்கையில் எப்படி நிறைவேறுகிறது என்று நாம் பார்க்கப்போகிறோம். அதற்குமுன், நம் நிலைமையை நாம் மீண்டும் ஒருமுறை நினைத்துப்பார்க்க வேண்டும்.

**புறக்கணிக்கப்பட்ட, துரத்தப்பட்ட பாவ இனம்**

பிறப்பின்படி, நாம் புறக்கணிக்கப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள்; இந்த இனத்தைப் பொறுத்தவரை, ஜீவ-மரத்துக்குப் போகும் வழி அடைக்கப்பட்டுவிட்டது; இந்த இனம் நித்திய ஜீவனைப் பெற முடியாமல் போய்விட்டது; இந்த இனத்துக்கு, மனிதனைக்குறித்த தேவனுடைய நோக்கம் மூடப்பட்டது. நாம் தேவனைவிட்டு துரத்தப்பட்டவர்கள். நம்மிடம் இருப்பதாக நாம் நினைக்கிற 'நல்ல காரியங்களும்', 'நல்ல தன்மைகளும்' தேவனிடம் செல்லுபடியாகாது. தேவனுடைய பார்வையில் அவைகளுக்கு எந்த

மதிப்பும் இல்லை. பூரணமே அவருடைய தரம். "*வித்தியாசமே இல்லை; எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்*", என்று வேதாகமம் திட்டவட்டமாகக் கூறுகிறது.

**புதிய இனம்**

ஆண்டவராகிய இயேசு சிலுவையில் தம் இரத்தம் சிந்தியதால் நாம் பாவ மன்னிப்பை மட்டும் பெறவில்லை; புறக்கணிக்கப்பட்ட, துரத்தப்பட்ட இந்த இனத்தைவிட்டு நாம் 'வெளியேறுவதற்கான ஒரு வழி'யையும் அவர் சிலுவையில் இரக்கமாய்ச் செய்துமுடித்தார். தேவனைப் பொறுத்தவரை, புறக் கணிக்கப்பட்ட இனம் சிலுவையில் மரித்தது. இயேசுவின் உயிர்த்தெழுதலில் அவர் ஒரு புதிய தொடக் கத்தை ஏற்படுத்தினார். தேவன் ஆதாமைப் படைத்தபோது அவன் எப்படிப்பட்ட மனிதனாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினாரோ, அப்படிப்பட்ட மனிதன் இப்போது அவருடைய குமாரனில் இருப்பதால், அவர் தம் குமாரனைப்போன்ற ஒரு புதிய இனத்தை இப்போது உருவாக்கிக்கொண் டிருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு ஒருமுறை, "*இந்த உலகத்தின் அதிபதி வருகிறான்; அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை,*" என்று கூறினார்; அவரால் தம்மைப்பற்றி அப்படிக் கூறமுடிந்தது; அவர் ஒருவரே அப் படிக் கூற முடியும். இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுக்குத் தம்மிடம் ஒன்றும் இல்லை என்று கூறினார். ஏனென்றால், அவர் "பாவமில்லாதவர்". சாத்தான் அவர்மேல் அதிகாரமோ, ஆளுகையோ செய்வதற்கான எதுவும் அவரிடத்தில் இல்லை. நம் பிரச்சினை என்ன தெரியுமா? சாத்தான் நம்மில் ஆழமாகக் காலூன்றிவிட்டான்; நம் இருதயம் அவனுடைய கூட்டாளியாக மாறி விட்டது; சாத்தான் கலகக்காரன்; அவன் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தான். அவனுடைய அந்த கலகத் தன்மையில் நாமும் பங்குபெற்றிருக்கிறோம்; அது நம்மிடம் இருக்கிறது. இதனால்தான் ஒருமுறை ஆண்டவராகிய இயேசு அவரைப் புறக்கணித்தவர்களை நோக்கி, "*நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டான வர்கள்,*" என்று சொன்னார். பாவிகளாலான இந்த விழுந்துபோன இனத்தை யோவான் ஏன் "பிசாசின் பிள்ளைகள்" என்று விவரிக்கிறார்? உண்மையாகவே இவைகள் கடுமையான வார்த்தைகள்! இவை களை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

**இரண்டு இனங்கள்**

நாம் பழைய மனித இனத்துக்கு மரித்து, புதிய இனத்துக்குள் மறுபடி பிறக்க வேண்டும். நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தில் அவரோடு ஒன்றிணைக்கப்பட்டு, அவருடனேகூட மரிக்கிறோம்; அவருடைய உயிர்த்தெழுதலில் அவரோடு இணைக்கப்பட்டு, நாம் மறுபடி வாழ்கிறோம். இப்போது இரண்டு மனித இனங்கள், அதாவது இரண்டு வகையான மனிதர்கள் அல்லது இரண்டு வகையான மக்கள், இருக்கிறார்கள். இரட்சிப்பு என்பது ஒரு இனத்திலிருந்து இன்னொரு இனத்துக்கு இடமாற்றப்படுவதாகும். ஆண்டவராகிய இயேசு இந்தப் புதிய இனத்தின் முதல் நபர், தலை, "ஒரு பெரிய குடும்பத்தில் மூத்தவர்...அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர்". அவர்வழியாகவும், அவரிலும், தேவன் இப்போது "அநேகக் குமாரர்களை மகிமைக்குள் கொண்டு வருகிறார்".

இந்த இரண்டு வரைபடங்கள் இரண்டு காரியங்களை வலியுறுத்துகின்றன. முதலாவது, தேவனைப் பொறுத்தவரை, ஒரு இனம், ஒரு வகையான மனிதன், நபர், மானிடம் இருக்கிறது; அந்த இனத்தில் "எந்த நன்மையும் இல்லை"; அந்த இனம் புறக்கணிக்கப்பட்ட இனம், தேவனுடைய சமுகத்திலிருந்து துரத்தப்பட்ட இனம், தேவனுடைய கடுமையான நடவடிக்கைக்கு ஆளான இனம், கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட இனம். ஆதாமுக்கும், சுயத்தை மையமாகக்கொண்ட அவனுடைய இனத் துக்கும் சிலுவையில் முடிவுகட்டப்பட்டது. அங்கு, கிறிஸ்துவில், நாமெல்லாரும் மரித்தோம். ஆனால், இன்னொரு வகையான மனிதன் இருக்கிறான்; அவன் 'கிறிஸ்து வகையான' மனிதன்; இந்த மனிதன் தேவனுக்கு முற்றிலும் ஏற்புடைய மனிதன்; இவன் 'மிக நல்லவன்', இவன் அவரில் மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப்பட்டிருக்கிறான். அவரோடு ஒன்றிணைக்கப்பட்ட எல்லாருக்கும் மகிமையான எதிர் காலம் உண்டு; அவர்களுக்கு மட்டுமே உண்டு.

இரண்டாவது, இந்த உண்மையை நாம் பார்க்க வேண்டும், ஒப்புக்கொள்ள வேண்டும்; நாம் அவருடன் சேர்ந்து ஒத்துழைக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் இதை நம்மில் நிறைவேற்ற வேண்டும், நிறைவேற்றுவார். நம்மிடம், "எனக்குப் பாவமன்னிப்பு வேண்டும்," என்ற ஆற்றமுடியாத் தேவையை

உணர்வதால் மட்டும் அதை மனந்திரும்புதல் என்று சொல்ல முடியாது. நம் இருதயத்தின் ஆழத்தில், "என்னிடத்தில் 'எந்த நன்மையும் இல்லை'; நான் கலகக்காரன்; என் தன்மையின்படி நான் சீர்கெட்ட திருத்தமுடியாத பாவி; கர்த்தர் என்னை அடியோடு மாற்ற வேண்டும்," என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும், வெறும் வார்த்தைகளோ, ஏதோ ஒருவகையான விசுவாசப் பிரமாணத்தை ஒப்பிப்பதோ, நாமெல்லாரும் பாவிகள்' என்ற கூற்றை மனதளவில் ஒத்துக்கொள்வதோ உண்மையான மனந்திரும்புதல் அல்ல. நம் பயங்கரமான உண்மை நிலையை நாம் கொஞ்சமாவது உணர வேண்டும். நாம் புறக்கணிக்கப்பட்ட பழைய இனத்தின் உறுப்பினர் என்ற நிலைக்கும், அந்த இனத்தில் நம் ஈடுபாட்டுக்கும் சிலுவையிலே நாம் மரித்தோம் என்பதையும், தேவனுடைய புதிய இனத்தின் உறுப்பினர்களாக நாம் கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்தோம் என்பதையும் பார்க்க வேண்டும்.

**'களைந்துபோடுதலும், தரித்துக்கொள்ளுதலும்'**

இந்த மாபெரும் மாற்றத்தை விளக்குவதற்காக, அப்போஸ்தலனாகிய பவுல் உடையைத் "தரித்துக் கொள்வதையும்", "களைந்துபோடுவதையும்" உருவகமாகப் பயன்படுத்துகிறார். "தரித்துக் கொள்ளுதலை' ஒரு இனத்தைக் குறிப்பதற்கும், "களைந்துபோடுதலை" இன்னொரு இனத்தைக் குறிப் பதற்கும் அவர் பயன்படுத்துகிறார். "களைந்துபோடுவதைப்" பழைய மனிதனின் தன்மைக்கும், "தரித்துக்கொள்வதைப்" புதிய மனிதனின் தன்மைக்கும் பயன்படுத்துகிறார்.

**கொலோசெ விசுவாசிகள்**

"பழைய மனிதன்" செய்யக்கூடிய சில பாவச் செயல்களை கொலோசெயர் 3:7-9இல் பவுல் விவரிக் கிறார். பழைய மனிதனின் பாவ வழிகளை விவரித்துச் சொன்னபின்பு, கொலோசெ கிறிஸ்தவர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுக்கிறார். "பழைய மனிதன் எப்படி நடப்பான் என்று நான் சொன்னேன். ஆனால், இப்போது நீங்கள் கிறிஸ்தவர்களாக நடக்க வேண்டும்," என்று வலியுறுத்துகிறார். அவர்கள் கிறிஸ்தவர்களாக நடக்க முடியும் என்பதற்கு ஆணித்தரமான ஓர் ஆதாரத்தையும் சொல்லுகிறார். "*நீங்கள் மனந்திரும்பியபோது, பழைய மனிதனையும், பழைய அகநிலையையும், பழைய தன்மை யையும் அதன் பழக்கவழக்கங்களையும் களைந்துபோட்டுவிட்டு, தன்னைப் படைத்தவருடைய சாயலுக் கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனிதனை, புதிய அகநிலையையும், புதிய தன்மையைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே,*" என்று அவர்களுடைய புதிய நிலையை அவர் அவர் களுக்கு நினைப்பூட்டுகிறார். அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பியபோது தங்களைப் புதிய இனத் துக்கு ஒப்புவித்திருந்தார்கள். ஆயினும், அவர்கள் இன்னும் பழைய இனத்தைச் சார்ந்தவர்களைப் போலவே நடந்தார்கள். எனவே, சிலுவையில் செய்து முடிக்கப்பட்ட உண்மையையும், அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றபோது தங்களை ஒப்புவித்த முடிவான உண்மையையும் பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டி, முறையிடுகிறார். உண்மையான ஞானஸ்நானம் என்பது ஒருவன் மனந் திரும்பி, தேவனுடைய புதிய முறைமைக்குத் தன்னை ஒப்புவிக்கின்ற அறுதியான ஒரு செயலாகும். அது ஒருவன் தன் நிலையை, நிலைப்பாட்டை, அறுதியாக அறிவிக்கின்ற தெளிவான பகிரங்கமான செயலாகும்.

**எபேசு விசுவாசிகள்**

திட்டவட்டமான, தீர்மானமான, இந்த உண்மையை கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் செயல் வடிவாக்கப் பிரயாசப்பட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 4:22-24இல் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். "*முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனிதனை, பழைய அகநிலையை, பழைய தன்மையை, நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் மனதில் ஆவியிலே புதிதாக்கப்பட்டு, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனை, புதிய அகநிலையை, புதிய தன்மையை, தரித்துக் கொள்ளுங்கள்,*" என்று கூறுகிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பிறப்பினால் ஆதாமின் இனம், இந்த விழுந்துபோன இனம், தங்கள் சம்பந்தத்தை இடையறாது தொடர்ச்சியாக மறுத்துத் தள்ளிவிட்டு, பரிசுத்த ஆவியின் ஆற்றலால் கிறிஸ்துவின் அவயவங்களாக, புதிய இனத்தின் அவயவங்களாக, வாழத் தங்களை இடையறாது தொடர்ச்சியாக ஒப்புவிக்க அவர் அவர்களை அழைக்கிறார்.

இதைப்போன்ற இன்னும் பல வசனங்கள் வேதாகமத்தில் உள்ளன. ஒருவேளை, ரோமர் *13:12, 14* அவையெல்லாவற்றின் தொகுப்புச்சுருக்கம் என்று சொல்லலாம். "*அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளி விட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுவைத் தரித்துக்கொள்ளுங்கள்*", என்று அந்த வசனங்கள் கூறு கின்றன. மேலும், "*உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே,*" என்று கலாத்தியர் *3:27* கூறுகிறது.

சிலுவையில் செய்துமுடிக்கப்பட்ட உண்மையின் வெளிச்சத்தில் விசுவாசிகள் உறுதியான நட வடிக்கை எடுத்தாக வேண்டும். நம் பழைய இனம் சிலுவையில் முடிவுகட்டப்பட்ட இனம். இப்போது விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் தங்கள் பங்குக்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அழைப்பு விடுக்கப்படுகிறது. முதல் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நிலைமையைப் பாருங்கள்; இரண்டாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நிலைமையையும் பாருங்கள். முதல் நிலைமை இரண் டாவது நிலைமையாக மாற வேண்டும். முதல் நிலைமை கையாளப்பட வேண்டும். எனவேதான், "*அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்,*" என்று பவுல் எச்சரிக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கையில் செயலற்ற நிலைக்கோ, அலைந்துதிரிவதற்கோ இடமே யில்லை.

"*புதிய மனிதனைத் **தரித்துக்கொள்ளுங்கள்**...பழைய மனிதனைக் **களைந்துபோடுங்கள்**... அந்த காரத்தின் கிரியைகளைத் **தள்ளிவிடுங்கள்**...ஒளியின் ஆயுதங்களைத் **தரித்துக்கொள்ளுங்கள்**... ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை **மரணத்துக்குள்ளாக்குங்கள்**... அதிக பயத்தோடும் நடுக்கத் தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் **பிரயாசப்படுங்கள்'***. இதுபோன்ற அழைப்புக்கு நாம் பதிலளித்து, முனைப்புடன் ஒத்துழைக்கும்போது பரிசுத்த ஆவியானவரின் ஆற்றலை நாம் அனுபவிப் போம். "*இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் நிரப்பீட்டினால் எனக்கு இரட்சிப்பாக முடியும்...ஏனெனில் நீங்கள் சித்தம்கொள்வதற்கும் செயலாற்றுவதற்கும் தேவனே தம் நல்லின்பத்தின்படி உங்களில் செயலாற்றுகிறார்.*"

"*திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்*". யாக்கோபு *1:22*